கவனிக்க.– 24.10.2025 ஆந் திகதிய 2460 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2461 - 2025 ඔක්තෝබර් මස 31 වැනි සිකුරාදා - 2025.10.31

2461 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 502 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 503 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரால,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) வது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மானியப் பத்திரம் இரத்து செய்தல் - (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையில் அம்பாந்தோட்டை மாவட்ட லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர்/ இசங்க லக்மால் விக்ரமநாயக்க என்னும் நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் 1995.11.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/11/பிரா 26567 கொண்ட மானிய பத்திரத்தில் உரிமையாளரான இலக்கம் 283, குடா கம்மான 02, வலக்கரை, லுணுகம்வெகரயில் வசிக்கும் பத்கம கங்கானம்கே ஜன்திரிஸ் ற்கு வழங்கி ஹம்பாந்தோட்டை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் ஹம்/95/1519/98 இன் கீழ் 1998.06.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் உப ஆவணத்தில் காணப்படும் பிரிதொருவராக சட்டப்படியாக உரிமையாளர் ஒருவர் இல்லாத படியால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பிரதி ஒருவராக மாSற விருப்பமின்மையாலும் பிரதி ஒருவராக ஒருவரை நியமிக்கவில்லை என அறிய கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் மானிய பத்திரம் அந்தச் சட்டத்தில் 104 வது உட்பிரிவின் கீழ் இரத்து செய்ய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இதன் மூலம் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.11.21ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் அறியத்தர வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டம் லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் மாகம் பத்துவே/ கோரலே கெண்தகஸ்மங்கட கிராம அலுவலர் பிரிவில் வலக்கரை குடா கம்மான 02 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பொறுப்பில் உள்ள மற்றும் சர்வேயார் ஜெனராலினால் தொகுக்கப்பட்ட எண் 1 கொண்ட புலத்தால்/ ............................ மூலம் தொகுக்கப்பட்ட எண் அ.கு.பி. 3 கொண்ட துண்டு பிரிக்கப்பட்ட தொகுதியில்/ ................. மூலம் தொகுக்கப்பட்ட எண் க. இ. சி. 83004 கொண்ட ரேகை குறிப்பில் இலக்கம் 12 கொண்ட நிலத் துண்டாக காட்டப்பட்டுள்ள அளவில் ஹேக்டயர்/ 0.2527 பெரிதாக கொண்டதும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குட்பட்ட அரசாங்க காணியாகும்.

வடக்கு : இலக்கம் 02 உட்பிரிவேசிக்கும் வழி;
கிழக்கு : இலக்கம் 03 காணி;
தெற்கு : இலக்கம் 45 காணி;
மேற்கு : இலக்கம் 11 காணி.

ஐ. எல். விக்ரமநாயக்க,
பிரதேச செயலாளர்.
தங்காலை.

பிரதேச செயலகம்,
தங்காலை,
2025, சனவரி 10.

10 - 386/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணசபையில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ உதவிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே) இந்திக ருவன் குமார விதாரன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி மூலம் 1987.12.16 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/வ/8929 உடைய வழங்கல் பத்திரத்தின் உரிமையாளர் ஆகிய வீரகெட்டிய வில் வசிக்கும் ஜயசிங்க மான்னச்சாரிகே பிரேமஸிரி என்பவருக்கு வழங்கப் பட்டு தங்காலை மாவட்டப்பதிவுக் காரியாலய இலக்கம் 1392 இன் கீழ் 1988.04.07 ஆந்திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு பிரதியீட்டாளராக ஆவதற்கு சட்டபூர்வமான ஒருவர் இல்லாமையின் காரணமாக அல்லது உரிமை உள்ள ஒருவர் இருப்பினும் அவர்/ அவன் பிரதியீட்டாளளராக விருப்பமின்மயினால் பிரதியீட்டாளர் தன்மைக்கு ஒருவரை நியமனம் செய்யவதற்கு இல்லை என அறிக்கைப்படுத்தப்

பட்டுள்ளதால் அந்த வழங்கல் பத்திரத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது பந்தியின் படி இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துச் செல்கின்றோம் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதெனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.11.21 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், வடக்கு கிருவா பத்துவின் மண்டாடுவ கிராம அலுவலர் பிரிவின், மண்டாடுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான அளவையாளர் நாயகம் மூலம் தயாரிக்கப் பட்ட இலக்கம் 243 உடைய ரேகை அறிக்கையின் இலக்கம் 165 உடைய காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் ஹெக்டயர் 0.161, - ஏக்கர் -, ரூட் --, பேர்ச் விசாலமுடையதுமான, பின்வரும் வகையில் எல்லையிடப்பட்ட அரசாங்கக் காணி : - மஹஸேருகஹஹேன அல்லது மண்டாடுவ தவ்வ

வடக்கு : காணி துண்டு இலக்கம் 166 உம்;
கிழக்கு : காணி துண்டு இலக்கம் 174 உம்;
தெற்கு : காணி துண்டு இலக்கம் 164 உம்;
மேற்கு : காணி துண்டு இலக்கம் 156 உடைய பிரவேசப் பாதையும் ஆகும்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்.
வீரகெடிய.

பிரதேச செயலகம்,
வீரகெடிய,
2025, ஓகத்து 05.

10 - 386/2

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/67983.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/L11/04/Palu/L.T.

**அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டம், பலுகஸ்வெவ பிரதேச அலுவலர் சொந்தமான இல. 589, ஹபரண கிராம உத்தியோகத்தர் (மாகாண) மூலம் தயாரிக்கப்பட்ட நிலவரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர், 21 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. திசாநாயக்க முதியான்சலாகே ரன்தேவ நில்கமல் திசாநாயக்க என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமறு:

வடக்கு: ஹபரண - தம்புள்ளை பிரதான வீதி;
கிழக்கு: ஏ. ஏ. குணசேகர மற்றும் தீபிகா பெல்பிட்டடிகல ஆகியோர் குடியிருக்கும் காணி;
தெற்கு: கே. ஏ. பியசேனவின் காணி;
மேற்கு: பீ. ஏ. பீ. ஜயசேகரவின் காணி.

02. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : முப்பது (30) வருடங்கள் (2022.11.16 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைக் காலம்** : 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட

குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** : தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.16 ஆந் திகதிகியிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிரந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்திணை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
“மிஹித்த மெதுர”,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 13.

10 - 387

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/58893.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/2/SLO/43/Disabled.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 218G, கந்தபுரம் கிரா அலுவலர் பிரிவின் தவசிகுளம் கிராமத்தில் காணி அலுவலரால் வரையப்பட்ட 2023/2 ஆம் இலக்க தோராயமான சுவட்டு வரைபடத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 1/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை புண்ணிய நடவடிக்கைகளுக்காக அங்கவீனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் சங்கத்தின் (Organization for Rehabilitation of the Handicapped) நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: பாலவிநாயகர் வீதி;
கிழக்கு: அரசாங்க காணி;
தெற்கு: ஒழுங்கை;
மேற்கு: பாதை.

02. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும்.

எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : முப்பது (30) வருடங்கள் (2025.09.26 முதல் 2055.09.25 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை** : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக காணியை புண்ணிய நடவடிக்கைகளுக்குத் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்படிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 22.

10 - 452